ஐ. தே. க. அரசைப்

# பதவியிலிருந்து அகற்ற முற்போக்குச் சக்திகள் திரள வேண்டும்

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 19 இதழ் 80

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2-5-78

## மேதின விழாவில் 'சிறிமா'

[கொழும்பு]

தற்போது ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை பதவியிலிருந்து அகற்ற இந்த நாட்டின் முற்போக்கு சக்திகள் யாவும் ஓரணியில் திரள வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவில் ஹவலக் பார்க்கில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ஜனநாயகத்துக்கு முரணான இன்றைய அரசைக் கவிழ்க்கும் நோக்கம் எமக்குக் கிடையாது என்றும் திருமதி பண்டாரநாயக்கா கூறினார்.

ஐ. தே. க. அரசு பதவிக்கு வந்த பின்னர் அமைச்சர்கள் அடிக்கடி வெளிநாடு செல்கிறார்கள். ஆனால் ஏன் செல்கிறார்கள், எங்கு செல்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதனால் மக்களின் பணம் விரயமாகிறதே ஒழிய எதுவித பலனும் இல்லை என்றும் அவர் கூறினார்.

**விமான சாகஸம்**

திருமதி பண்டாரநாயக்கா பேசிக் கொண்டிருந்த போது ஆகாயத்தில் ஒரு ஹெலிகோப்டர் பறந்து கொண்டிருந்தது. அதைக் கண்ணுற்ற அவர், நான் பதவியிலிருந்த போது வாங்கிய விமானங்களில் அவர்கள் சாகஸம் காட்டுகிறார்கள் என்று பலத்த சிரிப்புக்கிடையே கூறினார்.

அரசு இறக்குமதிக்கான பிர

[6ம் பக்கம் பார்க்க]

ஓரணியில் திரண்ட

# தொழிலாளர் சக்தியே தமிழ் ஈழத்தை உருவாக்கும்

## 'செல்வா' அஞ்சலியுடன் ஆரம்பமான ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் தொழிலாளரின் ஒற்றுமையை எடுத்துக் காட்டும் வகையில் பெருந்திரளான தொழிலாளர்கள் கலந்து கொண்ட தமிழ் தொழிற் சங்க கூட்டணி, செந்தமிழர் இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேதின ஊர்வலம் நேற்றுமாலை நல்லூர் முத்திரைச் சந்தை மைதானத்தில் ஆரம்பமாகி யாழ் நகரின் முக்கிய வீதிகள் வழியாக யாழ் மத்திய கல்லூரி மைதானத்தை வந்தடைந்தது.

ஊர்வலத்தின் ஆரம்பத்தில் செல்வாவின் பெரிய அளவு உருவப்படத்தை நல்லூர் சங்கிலியன் சிலைக்கு முன்பாக வைத்து கூட்டணித் தலைவர்களும், செந்தமிழர் இயக்க பிரமுகர்களும், மற்றும் பிரமுகர்களும் அஞ்சலி செலுத்தியபின்னரே ஊர்வலம் ஆரம்பமாகியது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், கூட்டணி எம். பிக்கள் திருவாளர்கள், வெ. யோகேஸ்வரன், வ. ந. நவரத்தினம், த. இராசலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், வி. பொன்னம்பலம் உட்பட தொழிற்சங்க பிரமுகர்கள் அணிவகுத்துச் செல்ல ஊர்வலம் அமைதியுடன் நடைபெற்றது.

ஊர்வலம் வந்த வீதியெங்கும் மக்கள் பெருமளவில் குழுமிநின்னர் பொலிஸ் பந்தோபஸ்துடன் உயர் பொலிஸ் அதிகாரிகள் நேரில் நிலைமையை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

ஊர்வலம் நல்லூர் வீதி, கிராண்ட்வீதி, மின்சாரநிலைய வீதி, ஆஸ்பத்திரிவீதி, பணிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## மேதின விழாவில் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

"ஒன்றுபட்ட தொழிலாளர் சக்தியே தமிழ் ஈழத்தை உருவாக்கும். இந்த வகையில் உழைக்கும் தமிழ் தொழிலாள வர்க்கம் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து தமிழ் ஈழக் கோரிக்கையை ஏற்று இன்று ஒன்றிணைந்திருப்பது நாம் கொண்ட இலட்சியம் ஈடேறும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதைக் காட்டுகிறது.

இவ்வாறு நேற்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற தமிழ் தொழிலாளர் மேதினப் பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் கூறினார்.

தமிழ் இனம் சுயநிர்ணய உரிமை பெறவும் தமிழ் ஈழத்தைமலரவைக்கவும் தமிழ் மக்கள் பத்தியில் வேரூன்றியுள்ள சாதி என்ற வியாதியிலிருந்து விடுதலைபெறவும் உறுதிபூண்ட நன்னாள் இந்நாளாகும் என்றும் திரு அமிர்தலிங்கம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது 'இந்தநாட்டின் தமிழ்தொழிலாளர்கள் கடந்த இனக்கலவரத்தின்போது தங்கள் வீடுகளிலேயே தாக்கப்பட்டார்கள். அவர்கள் இந்துக்களாகவிருந்தாலும், கிறிஸ்தவர்களாகவிருந்தாலும் அவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தால் அவர்கள் வழிபட்ட ஆலயங்கள் அழிக்கப்பட்டன. தெய்வத்திருச்சிலைகள் நொறுக்கப்பட்டன. இந்தநிலையில் நாட்டில் உயிர்வாழக்கூட உரிமையற்ற இனமாக தமிழ் இனம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இதுவரை சிங்களத் தலைமையை ஏற்று சம தர்ம மாக்ஸிய சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்ட இடதுசாரி இயக்கங்களைச் சார்ந்த வர்கள் தங்கள் தலைமைப் பீடங்களின் போக்கில் தாம் விரும்புகின்ற சோஷலிச தமிழ் ஈழம் சாத்தியம் இல்லை என்பதைக் கண்டு இன்று எமதணியில் நின்று நாம் இழந்த தாயகத்தை தமிழ் ஈழத்தை மீண்டும் வென்றெடுக்க ஒன்றிணைந்துள்ளார்கள். [கா-இ]

ஜனநாயக சோஷலிச

## அரசை உருவாக்க தொழிலாளர் போராட வேண்டும்

### யாழ்.நகரில் காந்தி அபயசேகரா

[வண்ணார்பண்ணை]

இந்த நாட்டில் தொழிலாள வர்க்கத்தின் சக்தியை வேரோடு அறுத்து ஒழித்துக் கட்ட இன்றைய முதலாளித்துவ ஆட்சி முனைந்து வருவதை தொழிலாள வர்க்கம் உணர்ந்துவிட்டது என்பதை யாழ்ப்பாணம் ஐக்கிய மேதினம் எடுத்துக்காட்டிவிட்டது கொழும்பில் தொழிற் சங்க சக்திகள் பிரிந்து நின்று மேதின கூட்டங்களை நடத்தியபோதும் யாழ்ப்பாணத்தில் ஓர் ஐக்கியம் தொழிலாளர் மத்தியில் உருவாகியதைக்கண்டு நாம் பெருமையடைகின்றோம். இந்த தொழிலாளவர்க்க ஒற்றுமை இலங்கையில் பலபடுத்தப்படும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ் முற்றவெளியில் நடந்த ஐக்கிய மேதின பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த திரு காந்தி அபயசேகரா பேசுகையில் தெரிவித்தார். யாழ். முற்றவெளியில் திரு. ஏ. சே. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

**ஊர்வலம்**

நேற்று மாலை 4 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் ஆரம்பமான ஐக்கிய மேதின ஊர்வலம் மாலை 6 மணிக்கு

[6ம் பக்கம் பார்க்க]

ஜனநாயக சோஷலிச

# சமுதாயத்தை அமைப்பதே இன்றைய அரசின் நோக்கம்

## ஐ. தே. க. மேதின விழாவில் ஜே. ஆர்.

[கொழும்பு]

ஜனநாயக சோஷலிச சமுதாயம் ஒன்றை உருவாக்குவதே இன்றைய அரசின் நோக்கமாகும். இப்பாதையில் செல்லும் உலக நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இவ்வாறு ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலிமுக மைதானத்தில் நடைபெற்ற ஐ தே க மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கடந்த காலங்களில் ஸ்ரீ செயலும் வெறுப்புணர்ச்சியையுமே வெளிக்காட்டப்பட்டது. ஆனால் இம்முறை சீனா, ரஷ்யாவிலுள்ளதுபோல கலாச்சார நிகழ்ச்சிகளுக்கே ஐ. தே. க. மேதினக் கூட்டத்தில் முக்கிய இடம் கொடுத்துள்ளோம் என்றும் திரு. ஜெயவர்த்தனா கூறினார்.

**பிறரின் தயவின்றி அபிவிருத்தி**

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் கூறியதாவது:

பிறரின் தயவின்றியே நாம் நமது நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும்.

அரசின் நடவடிக்கைகளில் தொழிலாளருக்கு உரியஇடம் அளிக்கப்படும் ஜனநாயகத்துக்கு முரணான சட்டம் என்றுமே ஆக்கமாட்டோம் என்றும் திரு. பிரேமதாசா கூறினார். (இ)

சரண்சிங் இல்லாத

# ஜனதா கட்சியை நினைத்துப் பார்க்க முடியாது

## ராஜினாமாவை வாபஸ் பெறவேண்டும்

புதுடில்லி, மே 1

'சரண்சிங் இல்லாத ஜனதா கட்சியை நினைத்துப்பார்க்கவே முடியாமல் இருக்கிறது எனவே உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் தமது ராஜினாமாவை வாபஸ் பெறவேண்டும்.'

[6ம் பக்கம் பார்க்க]

# ‘காலத்தால் அழியாப் புகழ் பெற்றவர் இலக்கணச்சுவாமிகள்’’

## குருபூஜையில் நயினை குருக்கள் உரை

[யாழ்ப்பாணம்]

‘‘இவ்வுலகத்தில் பிறப்பவர் எண்ணிக்கையற்றோராக இருப்பினும், அவர்களுள் மக்கள் சித்தையில் நிறைந்து காலத்தால் அழியாத புகழ்பெறுவோர் மிகச் சிலரே. அவர்களுள் இலக்கணச் சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர்.’’

இவ்வாறு நயினை நாகபூஷணி அம்மன்கோவில் பிரதமகுரு பிரதிஷ்டா பூஷணம் ஐ. கைலாசநாதக்குருக்கள், ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகளின் [இலக்கணச்சுவாமிகள்] 29வது குருபூசையில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

இக்குருபூசை ‘ஈழநாடு’ அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அவர் மேலும் பேசுகையில், ‘‘சுவாமிகள் இந்தியாவில் சென்றும் இலங்கையின் புகழ் பரப்பிய பெருமைக்குரியவர்.

‘‘தர்மபுர ஆதீனம் அவருக்கு அளித்த கௌரவம் எண்ணிப் போற்றத்தக்கது. பல அறிஞர்களும் சுவாமிகளிடம் ஆசிர்வாதம், ஆலோசனை பெற்றுள்ளனர். இதை ஒரு பெருமை அவர்கள் ஏற்றினர்.

‘இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒரேயொரு தேசியத் தமிழ் தின சரியான ‘ஈழநாடு’ சைவசமயத்திற்கு ஆற்றிவரும் சேவை அளப்பரியது. இத்தகைய சிறந்த தரம் மிக்கதோர் பத்திரிகை யாழ்ப்பாணத்திலிருந்து சிறப்புடன் வெளிவர சுவாமிகளின் சித்தம் துணை நிற்பதாகக் கருதி இறும்பூதெய்துவோம்’’ என்றார். (உ)

## கோரிக்கை

[சங்கானை]

தொல்புரம் கமத்தொழில் விளைவுப்பெருக்கக் குழு பிரதேச எல்லைக்குள் நடப்பு வருடகால போக நெற் செய்கைக்கான காப்புறுதிப் பணத்தை செப்டம்பர் மாதம் 30-ந் திகதிக்கு முன்பதாக சகல நெற்செய்கையாளரும் செலுத்த வேண்டும் என கமத்தொழில் காப்புறுதிச் சபை தொல்புரம் கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுத்தலைவர் திரு ஆர். யுஷ் ராஜா ஊடாகக் கேட்டுள்ளது.

அக்டோபர் 20-ந் திகதிக்கு முன் விதைக்கப்படும் நெற்காணிகள் தொடர்பில் விதைப்பிற்கு முன்னரே கட்டுப்பணம் செலுத்தப்படல் வேண்டுமெனவும் மேலும் விபரங்கள் அறிவதற்கு தங்கள் மாவட்டத்தின் விளைவு பெருக்கக் குழுக்களை அணுகும்படியும் புட்பராசா கேட்டுள்ளார். [உ]

## இரு கி. சே. பிரிவுகள்

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராமசேவையாளர் பிரிவு இரு கிராம சேவையாளர் பிரிவுகளாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மேற்கு என பிரிக்கப்பட்டுள்ளது. சுழிபுரம் கிழக்குப் பகுதி எட்டாம், ஒன்பதாம், பத்தாம் வட்டாரங்களை எல்லையாகக் கொண்ட சுழிபுரம் மேற்குப் பகுதி ஐந்து, ஆறு, ஏழு ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கியதாக பிரிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டதாக இது இருந்துவந்தது குறிப்பிடத்தக்கதாகும். [உ]

## ‘‘சமய வழிபாடு மூலம் ஒற்றுமை வளர்ப்போம்’’

— நல்லூர் எம். பி.

(நெல்லியடி)

கெளிநடுகளிலெல்லாம் நமது இசைக்கலையின் பெருமையை வெளிப்படுத்தவேண் பணித்திற்காக மட்டுமன்றி வித்துவ திறமைக்கலைக்காகவும் - கலைத்தாயின் கீர்த்திக்காகவும் வெளிக்காட்டல் வேண்டும். அந்தப்பொறுப்பில் இருந்து கலைஞர்கள் விலகுதல் கூடாது’ என்று நல்லூர் தேசிய பேரவை உறுப்பினரான திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டி சித்தாமணி விநாயகர் ஆலய கோபுர மகா கும்பாபிஷேகத்தன்று ஆலயத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தவில்மேதைதெட்சணாமூர்த்தியின் மகனுக்கு பொன்னாடை போர்த்து கௌரவித்தபோது பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், ‘சமயம் பக்தியை பரப்பினால் மட்டும் போதாது. மக்களிடையே ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்துதல் வேண்டும். நமக்கிடையே இருக்கும் பிளவுகள் நீங்கிபுதிய தொரு சமுதாயத்தை காணமுற்படவேண்டும்’’ என்றார். (உ)

## ‘விஷம்குடிப்பேன்’ என்பவர் செயலில் காட்டினார்

[நெல்லியடி]

தாயையும் சகோதரர்களையும் ‘மருந்து குடிப்பேன்’ என பலமுறையும் பயமுறுத்தி வந்த 15 வயதுடைய வாலிபர் ஒருவர் நிஜமாகவே கிருமிநாசினி அருந்தி மரணம் அடைந்தார்.

மேற்படி சம்பவம் தொண்டமானாற்றில் நடைபெற்றுள்ளது. குமாரசாமி இவராம் என்னும் இளைஞரே மேற்படி மரணமடைந்தவராவார். இவரின் மரணம் சம்பந்தமான விசாரணையை வடமராட்சி பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நடாத்தினார்.

சகோதரர் சண்முகநாதன் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

‘‘நாம் தொண்டமானாற்றில் ஒரு தேநீர்ச்சாலை வைத்து நடாத்தி வருகின்றோம். காலஞ்சென்ற இவராம் எனது சகோதரராவார். இவர் அடிக்கடி குழப்படி செய்துகொள்வார். தாயாரும் நானும் பலமுறையும் கண்டித்துள்ளோம். கண்டிக்கும்பொழுதெல்லாம் தான் மருந்து குடிப்பேன் என பயமுறுத்தி வந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமையும் தயார் தோசை சுட்டுக்கொண்டிருக்கும்போது எமது இளைய சகோதரருடன் சண்டைபிடித்தார். தாயார் ஏசினார். நானும் ஏசினேன். பின் கூப்பிட்டு கண்டித்தேன். பின் சிறிது நேரத்தின்பின் இவராம் தான் மருந்து குடித்துவிட்டதாகக் கூறினார். மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றோம். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் இவராம் இறந்துவிட்டார்’ என்றார்.

மேற்படி மரணவிசாரணையில் சாட்சியமளித்த டாக்டர் திரு. எஸ். ஜீ. லூதர், தாயார் கு. சரஸ்வதி, கு. சண்முகநாதன் ஆகியோரின் வாக்குமூலங்களை பதிவுசெய்து கொண்ட மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (உ)

## தொண்டமானாற்றில் மீன்வள ஆய்வுக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

‘‘தொண்டமானாறு ஆற்றின் அபிவிருத்தியும் அதன் மீன் வளங்களைச் சிறந்த முறையில் உபயோகப்படுத்துதலும்’’ என்பது பற்றிய கருத்தரங்கு ஒன்று ஜூன் மாதம் 11-ந் திகதி தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினரின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கினை பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் ஆரம்பித்து வைத்து ஆலோசனைகளும் வழங்குவார்.

வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இக் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். கடற்தொழில் திணைக்களம் சீநோர் நிறுவனம், நீர்வள ஆராய்ச்சி நிலையம் முதலிய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இக் கருத்தரங்கில் பங்குபற்றுவார்கள்.

இக் கருத்தரங்கினை சிறப்பாக நடாத்த தொண்டமானாறு வெளிக்கள நிலைய ஆராய்ச்சிப் பிரிவின் கலாநிதி கா. சித்திரவடிவேலுவும், திரு. ச. சத்தியமூர்த்தியும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள். இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் தொடர்பு உத்தியோகத்தர், ஆராய்ச்சிப்பிரிவு வெளிக்கள நிலையம், தொண்டமானாறு என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். (உ)

## ‘‘கல்வி, ஒழுக்கத்தில் உயர்நிலை பெற்றிருந்தார் கணேசையர்’’

[யாழ்ப்பாணம்]

‘‘வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர், கல்வியறிவில் மட்டும் மேம்பட்டவராக மாத்திரமல்லாமல் ஒழுக்கத்திலும் சிறந்தவராக இருந்தார். ஆனால் கணேசையர் போன்ற உத்தமர்களால்தான் ஒழுக்கநெறி நின்று வாழ்ந்துகாட்டமுடியும்’’ என புன்னாலைக்கட்டுவன் நலன்புரிச்சங்க ஆதரவில் நடைபெற்ற வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் நூற்றாண்டு விழாவில் பண்டிதர் இ. நமசிவாயதேசிகர் ஆசியுரை வழங்கும்போது குறிப்பிட்டார்.

இவ்விழா ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் சட்டத்தரணி பூ. இளையதம்பி தலைமையில் நடைபெற்றது. மங்களவிளக்கை திரு எஸ் இராசரத்தினம் ஏற்றிவைத்தார்.

யாழ் வளாக ஆங்கில விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி பேசுகையில் கூறியதாவது: வறுத்தலை விளான் கிராமத்தில் பல அந்தணப்பெருமக்கள் இருந்தாலும், ஐயா... என்றால், அது சிறப்பாக கணேசையரைத்தான் குறிக்கும். பெருந்தகையாளராக, அவர் விளங்கினார். நல்வாழ்வு வாழவேண்டுமாயின் வாரீர் வறுத்தலை என தமது பாடல்களில் சிறப்புற எடுத்துக்காட்டினார்’’ என்றார்.

யாழ். வளாக தமிழ்த்துறை தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் உரையாற்றுகையில், கணேசையரின் மொழி ஆய்வு வன்மையை மேற்கத்திய தத்துவ ஞானிகளுடன் ஒப்பிட்டு விளக்கினார்.

நூற்றாண்டுபேச்சுப்போட்டியில் பரிசில் பெற்ற, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, யூனியன் கல்லூரி, வசாவிளான் மகாவித்தியாலய மாணவர்களுக்கு கன்கேசன் பொலிஸ் அதிபர் திரு தி. தாமோதரம்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

டாக்டர் தி. ஞானசேகரன், நன்றிதெரிவித்தார். (செ-உ)

## பிணையில் செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

நிற்சாமம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 5 நபர்களும் தலா 1,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த பொன்னன் குணம் என்பவரது வீட்டினுள் புகுந்து துப்பாக்கிகள் சகிதமான கோஷ்டியொன்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் குணம் படுகாயமடைந்ததுடன் அவரது 4 வயது மகன் ரசேனு கொலையுண்டதும் தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்த நிற்சாமத்தைச் சேர்ந்த கார்த்திகேசு இராசதுரை, கார்த்திகேசு காசிப்பிள்ளை, நாகமுத்து சிவப்பிரகாசம், பூதர் மனோகரன், வல்லிபுரம் மகாதேவன் ஆகிய ஐவரும் மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், அவர்களைப் பிணையில் விடுமாறு விடுத்த விண்ணப்பத்தைஏற்று ஐவரும் தலா 1,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு, மேல்விசாரணை மே மாதம் 24ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## கூட்டணிக்கிளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த்தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளை நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எம். பி. திரு மு. சிவசிதம்பரம், உப. தலைவர் வண்ணை ஆனந்தன் செயலாளர் பெ. கனகசபாபதி, உப. செயலாளர் வ. தம்பித்துரை தனாதிகாரி இ. நாகராஜா.


## வரி விளம்பரம்

### தேவை

முதற்தரமான பைண்டர் தேவை. நேரில்வரவும். ஆர். எம். அச்சகம், யாழ்ப்பாணம். 9184

ஊதுபத்தி தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தொழிற்சாலைக்குச் சமீபமாக உள்ளவர்கள் விரும்பப்படுவர். ராதா வாசனைத் தொழிற்சாலை, 34, ஆடியபாதம் ரோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். 9169

அச்சுக்கூடத்தில் வேலைகள் பழக விரும்பும் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் தேவை: ஆர். எம். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9183

### விற்பனைக்கு

யாழ் நகரில் பிரசித்திபெற்ற புடவை வியாபார நிறுவனத்திற்கு புடவை, அழகு சாதனங்கள் விற்பனை செய்வதற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. விரும்புவோர் 5-05-78 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9194, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9194

‘‘வைத்தியர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உகந்த சுத்தமான நல்லெண்ணெய் தொகையாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும். தொடர்புகொள்ளவும்’ ராதா ஒயில் மில்ஸ், 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9182

பருத்தித்துறை நவீன சந்தையில் அமைந்திருக்கும் பார்வதிதேவி ஸ்ரோர்ஸ் பொருட்கள் தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. கடையை பெயர் மாற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்துதரப்படும். விபரங்களுக்கு: ஆ. கனகசபை, பார்வதிதேவி ஸ்ரோர்ஸ், 11, நவீனசந்தை, பருத்தித்துறை. 9196

I. C. M. A.

Foundation - Section A
Financial Accounting FAI
May 75 to Nov. 77 &
Pilot paper
Seven Question papers
and suggested answers
by
A. Somasundarampillai
B. A. F. C. A.
Rs. 25/-
Chartered Accountant
91½ (95) Stanley Road,
Jaffna.
Percival Hall,
Jaffna.
9172


### பிழை திருத்தம்

20, 25-4-78 திகதிகளில் வெளிவந்த அடைவு நகை ஏலவிற்பனவில் அடைவு பிடிப்பவரின் பெயர் கா. க. சோமசுந்தரம் எனஅறியத்தருகின்றோம். 9068

ஈழநாடு
The Eelanaadu

## மருந்து விலைக் குறைப்பு

இம்மாதம் எட்டாந் திகதி முதல், மருந்து விலைகளைக் கணிசமான அளவு குறைப்பதற்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நடவடிக்கை எடுத்திருப்பது பெரும் ஆறுதல் அளிப்பதாகும்.

அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் ஆயிரத்து இருநூறு வகையான மருந்து வகைகளின் விலைகள் நாற்பது சத வீதமாகக் குறைக்கப்படுமென்று சுகாதார அமைச்சு அறிவித்திருக்கிறது.

மருந்து விலைகள் சமீப காலத்தில் உச்சத்துக்கு உயர்ந்துவிட்டன. இதனால் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டது. நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவிட்டதால் தனியார் துறையினரும் மருந்துகளை இறக்குமதி செய்ய வாய்ப்பேற்பட்டிருக்கிறது.

தனியார் துறையினரும் மருந்துகளை இறக்குமதி செய்ய அனுமதிப்பதால் நல்ல புதிய புதிய மருந்துகள் கிடைப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கும்.

அரசினர் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும் நோயாளிகள் பலரும் பொதுவாக வசதி குறைந்தவர்களே. சமீப காலத்தில் பெரும்பாலும் ஆஸ்பத்திரிகளில் முக்கியமான மருந்துகள் "இல்லை'' என்றே அறிவிக்கப்பட்டுவந்தன.

வெளியில் மருந்து வாங்க வேண்டுமென்று டாக்டர்கள் தெரிவிப்பார்கள். வெளியில் மருந்து வாங்கக்கூடிய வசதியிருக்குமானால் ஆஸ்பத்திரிகளுக்கு அதிகாலையிலேயே சென்று 'கியூ'வில் நின்று அவஸ்தைப்படுவார்களா? தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்யும் டாக்டர்களிடம் சென்று சிகிச்சைபெற்றுவிடுவார்களே.

நீரிழிவு நோயினால் பிடிக்கப்பட்ட பலர், ஊசிமருந்து முறைக்குமுறை ஏற்ற வேண்டும்; இந்த மருந்துக்குகூடத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதிலும் தரம் குறைந்த மருந்தே சிலகாலம் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டது. இதனால் இந்த நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

மருந்துகளின் விலைகளைக் குறைப்பதற்கு ஜனாதிபதி எடுத்த நடவடிக்கையைப் பாராட்டவேண்டும்.

இதேசமயம், அரசினர் ஆஸ்பத்திரிகளில் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்படாதவாறும் தகுந்த நடவடிக்கைகளைச் சுகாதார அமைச்சு மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

## இணைப்புப் பற்றி பேசக் குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான தமது இணைப்புப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குச் செந்தமிழர் இயக்கம் 5 உறுப்பினர் கொண்ட குழு ஒன்றைத் தெரிவுசெய்துள்ளது.

இயக்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தில் இத்தெரிவு இடம்பெற்றது.

இக்குழுவில் திரு. வி. பொன்னம்பலம், திரு. சிவா சுப்பிரமணியம், திரு ஏ. சிகுமாரன், திரு. செல்லத்தம்பி திரு. எம். கே. தர்மலிங்கம் ஆகியோரே அங்கம் வகிக்கின்றனர்.

தம்முடனான இணைப்புப் பற்றிப் பேசுவதற்குக் கூட்டணியும் குழு ஒன்றைத் தெரிவு செய்ததற்கு, மத்திய குழு நன்றியைத் தெரிவித்துக்கொண்டது. [உ]



இலங்கையிலேயே மிக உயரமானதும் கலை அழகுமிக்கதுமான ராஜகோபுரம் என்று வர்ணிக்கப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் ராஜகோபுர, மணிக்கோபுர கும்பாபிஷேகம் சென்ற 23ந் திகதி காலை பக்திசிரத்தையுடன் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. பெருந்திரளான மக்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். ஈழத்தின் பிரபல நாதஸ்வரவித்துவான்கள் மங்கள இசை அளித்தார்கள். நண்பகல் முதல் நள்ளிரவு வரை சமயச் சொற்பொழிவுகள், பக்திப் பாடல்கள், வில்லிசை முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பெருமாள் கோவில் பிரதம குரு பிரதிஷ்டாபூஷணம் ஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் அபிஷேகக் கும்பம் பின்னேவர வீதிவலம் வருவதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

ஆசிரியருக்கு கடிதம்:

## சருமநோயாளர் துயருக்கு டாக்டர்கள் காரணமல்ல

யாழ். ஆஸ்பத்திரி சரும நோயாளர் பிரிவில் பணிபுரியும் டாக்டர்கள் பற்றி 1-5-78ம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியர் கடிதத்தைக் கண்ணுற்றதும் அதிர்ச்சியடைந்தேன்.

சரும நோயாளர் பிரிவில் பெருமளவில் காத்திருக்க டாக்டர்கள் உள்ளே தமது விடயங்களைச் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் உல்லாசமாக பணிமனைக்குச் சென்றுவருகிறார்கள் என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பது உண்மைக்குப் புறம்பானது.

சருமநோய் நிபுணர் டாக்டர் எஸ். நடராஜாவே அப்பிரிவுக்குப் பொறுப்பாக உள்ளார்.

நோயாளிகளுடன் அன்னியோன்னியமாகப் பழகும் சுபாவமும் எளிமையான போக்கும் கொண்ட இந்த டாக்டர் நோயாளிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துவருகி

(5 ம் பக்கம் பார்க்க)

## ஊர்ப்பெயரைமுழுமையாகக் குறிப்பிடுதலே சிறப்பு

சென்ற சனிக்கிழமை வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் நீர்வேலியைச் சேர்ந்த கவிஞர் ஒருவர் தன் கவிதையை வெளியிட்டு, அக்கவிதையின் கீழ் தன் பெயரைக் குறிப்பிடுகையில் 'நீர்வையூர்' என ஊர்ப் பெயரைக் குறிப்பிட்டு தன் பெயரையும் குறிப்பிட்டிருந்தார்.

இப்படித் தமிழ்க் கவிஞர்கள் ஊர்ப் பெயர்களைக் குறுக்கி தமிழை அழிக்கலாமா? நீர்வையூர் என்றால் அழகாகவா இருக்கிறது? நீர்வேலி என்று ஏதோ ஒரு காரணத்தால் வந்த பெயர்; அதைக் குறுக்கலாமா? நீர்வேலியென்றே பெயரைக் குறிப்பிட்டால் என்ன?

நவாலியில் வசித்த புகழ் பெற்ற ஒரு புலவரால் அவரது பெயருக்கு முன்னால் இடுகுறிப் பெயராக நவாலி என்ற முழுப் பதத்துடன் ஊர் என்று சேர்த்து நவாலியூர் என்று அந்த ஊர்ப்பெயர் இடம் பெற்றது. அப்படித்தான் நாங்களும் தங்கள் பெயருக்கு முன்னால் ஊர்ப் பெயரைக் குறிப்பிடுவதாக நினைத்து சிலர் நீர்வையூர், இணுவையூர், அளவையூர், காரையூர் இப்படியாகக் குறிப்பிடுகிறார்கள் எப்படியோ குறுக்கி கடைசியில் ஊர் என்று வந்துவிடவேணும் என்பதுதான் அவர்களின் நோக்கம். ஏன் முழுதாக ஊர் பெயர்களைக் குறிப்பிட்டால் என்ன?

இனிமேலும் இப்படியான தப்புகளைச் செய்யவேண்டாமென தமிழ்ப் பெரியோர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ச. ஜெயச்சந்திரன்,
நாச்சிமார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

"அனுராதபுரத்தில்

# சிங்களவர்களுடன்சேர்ந்து முஸ்லிம்களும் தாக்கினர்கள்

## காதர் என்னைக் காப்பாற்றினர்''

(அனுராதபுரம்)

"ஆகஸ்ட் கலவரத்தில் அனுராதபுரத்தில் இடம்பெற்ற வன்செயல்களில் சிங்களவர்களுடன் முஸ்லிம்களும் ஈடுபட்டிருந்தனர். ஒரு கோஷ்டியினர் மில்லுக்குவந்து தாக்கவந்த போது கன்டீன் மனேஜர் காதர் என்னைக் காப்பாற்றினர்."

இவ்வாறு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தியாகராஜா கனகசிங்கம் (29 வயது) என்பவர் அனுராதபுரத்தில் சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

'77ம் ஆண்டு ஆகஸ்டில் அனுராதபுரத்தில் ஒரு மில்லில் வேலைசெய்தேன். பழைய நகரத்தில் இந்த மில் இருக்கிறது. இந்தமில் முருகேசு கனகலிங்கத்துக்கு சொந்தமானது. அந்த மில்லில், உரிமையாளர், மனேஜர் இல்லாத நேரத்தில் இயக்குநராக இருந்தேன்.

'ஆகஸ்ட் 17ந் தேதி, நான் மில்லில் இருந்தேன். வேலை செய்துகொண்டிருந்தபோது 8 மணிக்கு ஒருவர்வந்து யாழ்ப்பாணத்தில் கலவரம் நடப்பதாகக் கூறினர். யாழ்ப்பாணத்துக்கு 100 பொலிசார் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறினர். பின் ஒரு இறுவன் வந்து தங்கவேலுமில்லைக் கொள்ளையடிப்பதாகக் கூறினர். அரை மணித்தியாலத்தின் பின் 25 பேர் ஓடிவந்தார்கள். அப்போழுது நேரம் 9 மணி. கலகத்திற்குப் போகிறமாதிரி சரத்தை உயர்த்திக்கொண்டு கோஷமிட்டு வந்தனர். காசை எடடா, அரிசியை எடடா' என்று கேட்டு மில்லுக்குள்வந்தார்கள். வேறு ஆட்கள் வேலைசெய்தார்களா தெரியாது. நாங்களும் ஓடிவிட்டோம். பொலிஸாரும் இருந்தார்கள்.

15 பேரும் சிங்கள ஆட்கள். இரண்டு பேர் முஸ்லிம்கள். மில்லுக்குள்வந்து காசைக்கேட்டார்கள், லாச்சியைத் திறந்து 612 ரூபாவை எடுத்தார்கள். 45 புசல் அரிசி இருந்தது. அரிசியையும் கொண்டுபோனார்கள். நெல்லு இருந்தது. கலவரத்திற்கு முன் நெல் உரிமையாளர் டிராக்டர் கொண்டு வந்து ஏற்றிச்சென்றுவிட்டார். பின் இராசையா மில்லுக்குச் சென்றுவிட்டார்கள். எனக்கு ஒருவரும் அடிக்கவில்லை. நான் அங்கே இருந்தேன்.

### காதர் காப்பாற்றினர்

'மற்றொரு கோஷ்டி பிறகு 11 மணிக்கு மில்லுக்குவந்தது. அதில் பெரும்பான்மையினர் சிங்களவர், முஸ்லிம்களும் இருந்தனர். கன்டீன் மனேஜர் காதர்வந்து என்னைத் தமது அறையில்வந்து இருக்கும்படி கூறினர். நான் காதரின் அறைக்குப் போனேன். கலவாங்கு, சைக்கிள் செயின், பொல்லு, தடியுடன் வந்தார்கள். கதவை உடைத்து திறந்தார்கள். காதர்வீட்டு யன்னலால் பார்த்தேன். மில்லை உடைக்கிறார்கள். வெளியில் வரவேண்டாம் எனக் காதர் கூறினர். மில்லை உடைக்கும் சத்தம் கேட்டது. சாமான்களை ஒவ்வொருவரும் எடுத்துச்சென்றனர். அதற்குப்பிறகு நேற்றுதான் அனுராதபுரம் வந்தேன். முதலாளி அறையைப் பூட்டிவிட்டு ஊருக்குப்போனார் பெறுமதியான சாமான்கள் அறைக்குள் இருந்தன. அவற்றை இரண்டாவது கோஷ்டியினர் கொண்டுபோனார்கள். நான் காதர் வீட்டிலிருந்து காட்டுக்குள்போய் மறைந்தேன். காட்டுக்குப்போகச் சொல்லி காதர் ஆலோசனை கூறினர். அந்நேரம் தமிழர்களுக்கு அடிவிழுந்துகொண்டிருந்தது இராசையா மில் உரிமையாளர் மகன் அடிவாங்கி ஓடியதைக் கண்டேன். 'அடிக்கிறாங்கள்' என்று சொல்லிக் கொண்டு ஓடினர்.

நான் 8 மாதம்தான் மில்லில் வேலைசெய்தேன். அடிக்கவந்தவர்களை அடையாளம் தெரியாது. பார்த்தால் அடையாளம் காட்டுவேன். அவர்கள் அயலவர்கள் அல்ல. தூரத்தில் இருப்பவர்கள். நான் கச்சேரிக்குச் சென்று பின்பு யாழ்ப்பாணம் போனேன்.

முருகேசு கனகலிங்கம் மில்லில் வேலைசெய்த அனுராதபுரத்தைச் சேர்ந்த விவசாயியான இராமசாமி பொன்னையாவும் சாட்சியமளித்தார். (க-அ)

## எம். பி. நடவடிக்கை

(நெல்லியடி)

வேலையற்றவர்கள் வேலை வழங்கும் வங்கிக்கு விண்ணப்பிக்கும் படிவங்கள் மிக விரைவில் உடுப்பிட்டித் தொகுதியில் உள்ளவர்களுக்கு வழங்க உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றார்.

"சைவப்பெரியார்

# நூற்றுண்டுவிழா சமய

## மறுமலர்ச்சிக்கு வித்திடவேண்டும்''

[யாழ்ப்பாணம்]

"'சைவப் பெரியார்' நூற்றுண்டு விழா மாணவர் மத்தியில் சமய உணர்ச்சியின் மறுமலர்ச்சிக்கு வித்திடவேண்டும். சமயகைச்சி ... இக்கால ... திரு ... எதிர்ப்பு ... களுக்கு ... புலகார ... ணம்''

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றுண்டு விழா ... நிலைக்... ... வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது ... மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் அவர் மேலும் கூறியதாவது:

"உடல்பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்த சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின் சாதனைகள், போதனைகள் இக்கால மாணவர்களுக்கு ஒரு புராணக்கதை போலத் தோன்றும். நல்லனவும் அவரைப் பின்பற்றும் பெரியாரின் பழைய மாணவர்கள் அபிமானிகள் இன்றும் உயர்வு தல்லாமல் சமூகத்தில் செல்வாக்குடனும் செயல்புரிகிறார்கள். எனவே இச்சபை எடுத்துக்கொண்ட நற்பணிகள் வெற்றிபெறும் என்பது எமது நம்பிக்கை. இக் காரியத்துக்கு போதிய ஒத்துழைப்புகளை வழங்குவேன்''. சபைச் செயலாளர் திரு. க. கிருஷ்ணபிள்ளை பேசுகையில், மலாயாவில் செயல்புரியும் சைவப் பெரியாரின் பழைய மாணவர் சங்கம் அன்னாரின் நூல் ஒன்றை பிரசுரித்து வெளியிட முடிவுசெய்துள்ளது என குறிப்பிட்டார்.

[5 ம் பக்கம் பார்க்க]

பாரதிதாசன் நினைவாக

# தமிழ்ப் புலவருக்கு ஆண்டுதோறும் தங்கப்பதக்கம், ரூ.10,000 பரிசு

## முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, மே 1

''பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக தமிழக அரசு ஆண்டு தோறும் தமிழ்ப்புலவர் ஒருவருக்கு விருது வழங்கி கௌரவிக்கும்.''

இதனை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று சென்னையில் நடைபெற்ற பாரதிதாசன் நினைவு விழாவின் இரண்டாம்நாள் நிகழ்ச்சியில் அறிவித்தார்.

### கவிஞர் சுரதாவுக்கு கௌரவம்

இவ்வருடம் தமிழ்ப் புலவருக்கான விருதை அவர் கவிஞர் சுரதாவுக்கு வழங்கினர்.

தங்கப் பதக்கமும் 10,000 ரூபா பணமும் தமிழ்ப் புலவர்க்கு வழங்கப்படுவதே இக்கௌரவ விருதாகும்.

### பாரதிதாசன் குடும்ப நல்வாழ்வு

முதல்வர் திரு. எம்.ஜி. ஆர். இவ்விழாவில் பேசுகையில் மேலும் கூறியதாவது:

பாரதிதாசனின் குடும்பத்தினர் நல்வாழ்வுக்கு தமிழக அரசு உதவியளிக்கும். பாரதிதாசனின் பாடல்களை நாட்டு உடைமையாக்க வேண்டும். அவரது நூல்களை மொழி பெயர்ப்புச் செய்வதற்கும் அவரது கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிப்பதற்கும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

தமிழக நலன் காக்கவும் தமிழர் நலன்பேணவும் எமது அரசு தொடர்ந்து பாடுபடும்'' என்றார்.

### நாவலர் பேச்சு

இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிஉரையாற்றிய நாவலர் வி. ஆர். நெடுஞ்செழியன், சாதாரண மக்களுக்காகவும் கவிபாடியதாலேயே பாரதிதாசன் புரட்சிக்கவி எனப் பாராட்டுப்பெற்றார்.

சுப்பிரமணிய பாரதியார் விடிவெள்ளி என்றால் பாரதிதாசன் எழுஞாயிறு'' என்றார்.

ம. பொ. சி. பேசுகையில், ''மகாகவிகளின் முன்னோடி பாரதிதாசன்'' என்றார்.

குமரி அனந்தன், திருவாரூர் தங்கராசு உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

# ''மாணவர்களே அரசியல் சூழ்ச்சிவலையில் சிக்காதீர்''

## எம். ஜி. ஆர். வேண்டுகோள்

சென்னை, மே 1

''மாணவர்கள் ஜாதி, இத பேதங்களை மறந்து அரசியல் கட்சிகளின் சூழ்ச்சிவலையில் சிக்காமல் வாழ்வை வளப் படுத்திக்கொள்ளவேண்டும்'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

பேரறிஞர் அண்ணாதுரையின் உருவப்படத்தை இவ் வைபவத்தில் அவர் திறந்து வைத்தார்.

திரு. எம். ஜி. ஆர். மேலும் பேசுகையில், மாணவர்கள் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்க்கவேண்டும். அரசியல் தலையீடு மாணவர் பிரச்சினையில் இருக்கக்கூடாது. மாணவர்களுக்கு மாணவர்களே தலைவர்களாக இருக்க வேண்டும். வெளியார் தலைமை இருக்கக்கூடாது'' என்றார். [உ]

ஆப்கானிஸ்தான் அரசுக்கு

## அங்கீகாரம்

காபூல், மே 1

ஆப்கானிஸ்தானின் புதிய ஆட்சியை சோவியத்யூனியன் அங்கீகரித்துள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாகவும் பிரதமமந்திரியாகவும் நூர் முகமது டராகி பதவியேற்றுள்ளார்.

### மக்கள் குடியரசு

ஆப்கானிஸ்தானை அவர் மக்கள் குடியரசாகப் பிரகடனம்செய்துள்ளார்.

மறுஅறிவித்தல்வரை இராணுவ சட்ட நடவடிக்கைகள் நீடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. டராகி கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ஆவார்.

புதிய அரசு பதவி ஏற்றதையடுத்து உபஜனாதிபதி ஜனாதிபதியின் குடும்பத்தவர், சகோதரர்கள், அமைச்சர்கள் முதலானோர் கொல்லப்பட்டு விட்டனர் என்று அறிவிக்கப் படுகிறது.

ஜனாதிபதி தாவூத் முதலிலேயே கொல்லப்பட்டுவிட்டார். (உ)

அல்டோமோரோவின்

## உயிரைக் காப்பாற்ற குடும்பத்தவர் கோரிக்கை

ரோம், மே 1

செம்படை கெரிலாக்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ள மாஜி இத்தாலியப் பிரதமர் அல்டோ மோரோவின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அவரது குடும்பத்தினர் இத்தாலிய ஜனாதிபதி பிரதமர் ஆகியோருக்கும், கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அல்டோமோரோ கடத்திச் செல்லப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது என்பது தெரிந்ததே. [உ]

ம. கி. பிரச்னை:

# கார்ட்டர்-பெகின் சந்தித்துப் பேசுவர்

நியூயோர்க், மே 1

இஸ்ரேலிய பிரதமர் பெகின் நியூயோர்க் வந்துள்ளார்.

இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டு 30 ஆண்டுகள்பூர்த்தியாவதை யொட்டி வெள்ளைமாளிகையில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள வைபவம் ஒன்றில் கலந்து கொள்ளவே அவர் முக்கியமாக வந்துள்ளார்.

திரு. பெகின் அமெரிக்காவில் ஒருவாரம் தங்கியிருப்பார்.

அவர் ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டருடன் பரஸ்பர தொடர்புகள் மத்தியகிழக்கு விவகாரம் என்பன குறித்து விரிவாக பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார். (உ)

# ''சிறந்தகண்டக்டரின் தகைமைகள் என்ன?''

## யாழ். ரோட்டறி தலைவர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''தொழில்துறைகளில்கடமையாற்றுபவர்கள் அனைவரும் ஒவ்வொரு துறையில் மட்டும் தான் தகுதி படைத்தவராக இருப்பர். ஆனால் பஸ் நடத்துநர்கள் சேவைக்கு பல தகைமைகள் வேண்டும். அவர்கள் காலைமுதல் மாலைவரை தனது அன்றாட சேவையில் பலதரப்பட்ட மனிதர்களுடன், அன்பு, பண்பு,இரக்கம். தயவு, இனங் கொள்ளாமை,சேவை மனப்பான்மை ஆகிய சிறிய பண்புகளுடன் இருக்கவேண்டும். அதற்கு அவர்களுக்கு பல தகுதிகள் வேண்டும். இதனாலேதான் ரோட்டறிக் கழகம் சிறந்த பஸ் நடத்துநரைத் தெரிவுசெய்து, அவரைப்போல மற்றைய நடத்துனர்களும் மக்கள் ஆதரவைப் பெறும் வகையில் சேவையாற்றவேண்டும் என்ற நோக்கிற்காக, இப்போட்டியை நடாத்தி பரிசளித்துக் கௌரவித்துள்ளது.

இவ்வாறு யாழ். ரோட்டறிக் கழகத்தினதும், இ. போ. சபை யாழ்டிப்போவின் வருடாந்த விளையாட்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். ரோட்டறிக்கழகத் தலைவரும், தொழிலதிபருமான திரு ஏ. குணரத்தினம் கூறினார்.

இவ்விழா, யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெற்றது விழாவின் பிரதம விருந்தினராக இ. போ. சபை வட பிரதேச கட்டுப்பாட்டாளர் திரு. கே. நாகரத்தினம் கலந்துகொண்டார்.

திரு. ஏ. குணரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் யாழ். பஸ்நிலையத்தில் இருந்து செல்லும் 45 பாதைகளுக்கு சிறந்த நடாத்துநரைத் தெரிவுசெய்ய விரும்பினோம். ஆனால் மக்கள் போதிய ஆதரவு கொடுக்காமையினால் 16 பாதைகளில் சேவையிலுள்ள நடாத்துநருக்கு பரிசளிக்கின்றோம்.

### சிறந்த சாரதி தெரிவு

எமது ரோட்டறி ஆண்டு விழாவினைபோட்டி, வடபகுதி

(5-ம் பக்கம் பார்க்க)



### தமிழ்மொழியை

# முஸ்லிம்கள் உயிராக மதிக்கின்றனர்

(வெள்ளவத்தை)

இந்திய முஸ்லிம்களைவிட இலங்கை முஸ்லிம்கள் தமிழ் மொழியை வளர்ப்பவர்கள் அதை உயிராக நேசிப்பவர்கள் தமிழை வளர்க்கிற நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. நாங்கள் சிங்கள பகுதிகளில் வாழ்ந்தாலும் தமிழ்மொழியை சிறப்பாக பேசுகிறோம்.

இவ்வாறு ஓட்டல் கூட்டுத்தாபன பிரதித் தலைவர் அல்ஹாஜ் இஸட் எம் மசூர் மௌலானா பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த பாடகர் ஜனாப் எச். எம். ஹனிபாவிற்கும், எழுத்தாளரும் பேச்சாளருமான ஜனாப் முராத்பேக் அவர்களுக்கு கொழும்பு ஸாகிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் கலாநிதி எம். உவைஸ் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

அனைத்திலங்கை சன்மார்க்க சபையால் ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டத்தில் ஜனாப் நெய்னார் அனைவரையும் வரவேற்று பேசினர்.

ஜனாப் முராத்பேக் பேசுகையில் வந்தாரை வரவேற்பதில் இங்குள்ளவர்கள் தலைசிறந்தவர்கள் கலை, இலக்கியத்துறைகளில் இலங்கையில் புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது என்றார்.

பாடகர் ஜனாப் எச் எம் ஹனிபா இலங்கை இசையமைப்பாளர் ஜனாப் முகமட் சாலி குழுவினருடன் பல பாடல்களைப் பாடினர். (இ)

# புதிய ஆப். குடியரசுக்கு இந்தியா அங்கீகாரம்

புதுடில்லி, மே 1

திடீர் இராணுவப் புரட்சியின் பின் உருவாக்கப்பட்ட புதிய ஆப்கானிஸ்தான் ஜனநாயகக் குடியரசை அங்கீகரிப்பதென இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

காபூலில் இந்தியத் தூதவராக இருக்கும் திரு எஸ். கே. சிங் இந்திய அரசின் இம்முடிவை ஆப்கானிஸ்தானின் புதிய இராணுவச் சபையின் தலைவர் ஜனாப் மூகம்மது தட்டாகியிடம் தெரிவிப்பார் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வாஜ்பாய் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் புதிய குடியரசை பல்கேரியாவும், சோவியத் யூனியனும் ஏற்கனவே அங்கீகரித்துள்ளன.

இதே வேளையில் காபூலுக்கும் புதுடில்லிக்குமிடையிலான தொலைபேசித் தொடர்புகள் மீண்டும் இன்று பகல் ஆரம்பமாகின. (இ)

## சரண்சிங் ..

[1-ம் பக்க தொடர்ச்சி]

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு ஏ. பி. வாஜ்பாய் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியதும் மேற்கொண்ட வேண்டுகோளை விடுத்தார்.

சுகயீன முற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் திரு. சரண்சிங் ஜனதா கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக ஜனதா கட்சியின் தேசிய நிர்வாகக்குழு, ஆட்சிமன்றக் குழு ஆகியவற்றிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளது தெரிந்ததே.

ஜனதா கட்சிக்குள் தோன்றியுள்ள கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். அதற்காக திரு. சரண்சிங் ராஜினாமாச் செய்யக்கூடாது என்றும் திரு. வாஜ்பாய் கூறினார். (இ)

## கந்தபுராண அறிவுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

வண்ணை கோசாலைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவத்தின் போது பத்துத் தினங்களிலும் கலைவிநோதன் கே எம். கணபதிப்பிள்ளை (சின்னமணி) யின் கலைவாணர் வில்லிசைக் குழுவினரால் "கந்தன் கருணை" என்னும் தொடர் வில்லிசை நிகழ்ச்சி நடத்தப்பட்டு பத்துத் தினங்களும் தொடர்ந்து கதை கேட்ட மாணவ மாணவிகளுக்குள் கந்த புராண அறிவுப்போட்டி ஒன்று வில்லிசைக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போட்டியில் பங்குபற்றிய 144 மாணவ மாணவிகளில் கீழ் வருவோர் பரிசு பெற்றனர்.

மேற்பிரிவு:- செல்வி இராசையா உமாராணி, செல்வன் ஜெகராசா சௌந்தரராசா, செல்வன் யாதவராசா திருமாவளவன்.

மத்திய பிரிவு:- செல்வன் மணிவண்ணன், செல்வன் லோகேந்திரன் நரேந்திரன், செல்வி சின்னத்துரை நிர்மலாதேவி.

கீழ்ப்பிரிவு:- செல்வி சிவசுப்பிரமணியம் சிவாஜினி, செல்வி கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வி, செல்வன் ஜெயரத்தினம் அசோகபத்மன்.

நவரத்தினராஜா ஜெகராஜா, கிருஷ்ணபிள்ளை ராஜ்மோகன், கதிரவேலு பிரபாகரன் ஆகியோர் ஆறுதல் பரிசு பெற்றனர்.

பரிசளிப்பு வைபவத்தின் போது விழாவிற்கு திரு. சிற்றம்பலம் ஆசிரியர் தலைமை தாங்கினார். மற்றும் வித்துவான் கந்தையா, ஆசிரியர் வ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து சிறப்புரை நிகழ்த்தினர். கோசாலை பிள்ளையார் கோவில் தேவஸ்தான அதிபரும் நடன ஆசிரியருமான 'கீதாஞ்சலி' வி.கே. நல்லையா பரிசுகள் வழங்கினார். ஆசிரியர் சிற்றம்பலத்தினால் வில்லிசைக் கலைஞர்கள் மாலையணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். (இ)

## செல்வா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டு வீதி வழியாக மைதானத்தை அடைந்தது

தமிழ் தொழிலாளரின் ஒற்றுமையை நிலைநாட்டும் வகையிலான கோஷங்களும், தமிழினத்தின் 'தாரகமந்திரம் தமிழ் ஈழம்', 'சுயநிர்ணய உரிமையை வழங்கு' 'தமிழர் படை தான் மறவர்படை' ஆகிய கோஷங்களும் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன.

ஊர்வலம் நேற்றுப் பிற்பகல் 3-47 மணிக்கு ஆரம்பமாகி சரியாக 4 38 மணிக்கு மைதானத்தை அடைந்தது.

ஊர்வலத்தில் 18 தொழிற் சங்கங்களின் அணியும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், செந்தமிழர் இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி, இளைஞர் பேரவை, மகளிர் பேரவை, ஐக்கிய கூட்டுத் தொழிலாளர் சங்கம், விவசாய விஸ்தரிப்பாளர் சங்கம் மலையக விவசாய காங்கிரஸ் ஆகிய அணிகள் கலந்து கொண்டன. [கெ-இ]

## பருத்தித்துறை

# இ. போ. ச. டிப்போவில் பெரும் திருட்டு அம்பலம்

[நெல்லியடி]

பருத்தித்துறை இ போ ச டிப்போவில் மூன்று டேடியேற்றர்கள் திருட்டுப்போனது சம்பந்தமாக விசாரணை செய்து வந்த பொலிசார் இ.போ.ச.விற்கு சொந்தமான பல்லாயிரம் ரூபா பெறுமதியான வேறு பொருட்களும் திருடப்பட்டுள்ளது கண்டு பிடித்துள்ளார்கள்.

பருத்தித்துறை பொலிஸ் சார்ஜன்ட் செ மாணிக்கராசா தலைமையில் பொலிசார் இரவு பகலாக தொடர்ந்து விசாரணைகளையும் தேடுதலையும் நடாத்தி வந்ததன் பயனாகவே மேற்படி திருட்டுக்கள் அம்பலமாகியுள்ளது. பொலிஸ் விசாரணையின் போது தனியார் லொறி உரிமையாளர்களும் பிரசன்னமாயிருந்தார்கள்.

திருட்டுக்களை நடத்திய கூட்டத்தின் தலைவரெனக் கருதப்படும் ஒருவரைத் தேடி பொலிஸ் வலைவிரித்துள்ளது.

## ஜனநாயக சோஷலிச —

[1-ம் பக்க தொடர்சி]

முற்றவெளி மைதானத்தை வந்தடைந்தது.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தைச்சேர்ந்த திரு. ஏ. கே. சுப்பிரமணியம், கே. செந்தில்வேல், சாந்தி அபயசேகரா, அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. வே. பொன்னம்பலம், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. பி. பானுதேவன், லங்கா தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. சி. நடராசா உட்பட பல தொழிற்சங்க பிரமுகர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் சாந்தி அபயசேகரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

மக்களின் எழுச்சிகளை, தொழிலாளவர்க்கத்தின் உரிமைக் குரலை ஒழித்துக்கட்ட இன்றைய அரசு எடுத்துவரும் தொழிற்சங்க விரோத நடவடிக்கைகளை தொழிலாளர்களாகிய நாம் எதிர்த்துப் போராடவேண்டிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம். எமது பிரதான எதிரிகள் இன்று ஆட்சியை பிடித்தது மட்டுமல்ல பாராளுமன்ற ஆசனங்களையும் பிடித்துக்கொண்டு வர்க்க ரீதியாக தொழிலாள இனத்திற்கு எதிராக இயங்க முற்பட்டு வருகின்றனர்.

இன்றைய தாபீக அரசு ஆட்சிக்கு வந்த சில மாதங்களில் கொடூர ஆட்சி நடந்ததை எமது நாடு அறிந்துவிட்டது. கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் அரசாங்க குண்டர்களால் தாக்கப்பட்டனர். 4-ம் மாடியை அகற்றிவிடுவோம் என்று கூறிய ஜே. ஆர். இன்று மேலும் இரகசிய பொலிஸ் படைகளையும் மாடிகளையும் விஸ்தரித்து வருகிறார். கொடுமைகள் இந்த ஆட்சியில் பலப்படுத்தப்படுகின்றன. முதலாளிகள் பல உருவிலும் வளர்க்கப்படுகின்றனர். தொழிலாள வர்க்கத்தின் பொது எதிரியான இன்றைய முதலாளித்துவ அரசுக்கெதிராக ஒரு வெகுஜன இயக்கத்தை உருவாக்க தொழிலாள வர்க்கம் முன்வர வேண்டும். இந்த நாட்டில் ஜனநாயக சோஷலிச அரசை நிறுவ தொழிலாள வர்க்கம் ஒற்றுமையுடன் போராட முன்வரவேண்டும், என்றார்.

# ஒரு லட்சம் புசல் நெல் கொள்வனவு

(மட்டக்களப்பு)

ஈச்சந்தீவு-கன்னன்குடா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த பெரும்போகத்தின் போது ஒரு லட்சம் புசல் நெல்லைக் கொள்வனவு செய்துள்ளது.

இதேவேளையில் மட்டக்களப்பின் நெற்களஞ்சியம் என கருதப்படும் படுவான்கரையில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவுசெய்யும் நெல்லை இங்கேயே குற்றுவதற்கான ஏற்பாடுகளை ஈச்சந்தீவு கன்னன்குடா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுவருகிறது. மேற்படி அரிசிஆலையை உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சு வழங்கும் கடனுதவித் திட்டத்தில் நிறுவுவதற்கு திட்டமிட்டிருக்கிறது என சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. கந்தையா ஹீன்நிலமே நமது நிருபரிடம்தெரிவித்தார்.

கடந்த பெரும்போக நெற்செய்கையின்போது அங்கத்தவர்களுக்கு விவசாயக் கடன் வழங்கியவகையில் மேற்படி சங்கம் இரண்டுலட்ச ரூபாவை பங்குப்பணமாக பெற்றுள்ளது. இப்பணம் சங்கத்தின் வியாபார நிதியில் சேர்க்கப்பட்டு அதிலிருந்து பெறப்படும் இலாபம் அங்கத்தவர்களுக்கு பங்குலாபமாக பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் கூறினர். (இ)

## மரண அறிவித்தல்
### திருமதி இரத்தினசிங்கம் இராசமலர்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினசிங்கம் இராசமலர் காலமானர். இவர் திரு. பொன்னுத்துரை இரத்தினசிங்கத்தின் (Retired Forman Telecommunication Dept , Ceylon Navy Trincomalee) அன்பு மனைவியும், துரைரெட்ணம் (சவூதி அரேபியா) திலகரெட்ணம் (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி, புஸ்பவதி ஆசிரியாரின் அன்புத் தாயாரும் இந்திராணியின் அன்பு மாமியாரும் ஆவர். பூதவுடல் அன்னரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு இன்று செவ்வாய்க்கிழமை (2-5-78) மாலை 4-30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

'புஸ்பகிரி'

9199 219, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மேமாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in SriLanka

## பதவியிலிருந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணங்களை தளர்த்தியுள்ளதால் உள்நாட்டு கைத்தொழில் பெரிதும் பாதிப்படைந்துள்ளது என்றும் அவர் கூறினர்.

'தமிழ் மக்களும் மேம்பட்டு வாழவேண்டும்.'

'தமிழ்-சிங்கள இனங்களுக்கு இடையே ஒற்றுமை வேண்டும்'

'அந்நியருக்கு நாட்டை அடைவு வைக்காதே' ஆகிய கோஷங்களும் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன. [ம]

## நிரந்தர அதிபர் இல்லை

[சுழிபுரம்]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு நிரந்தரமான அதிபர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. இதனால் கல்லூரியின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்விமான்களும் பொதுமக்களும் புகார் தெரிவித்துள்ளனர். [இ]

# 'இந்தோனேஷியாவில் தமிழ் இந்துக்களின் நிலை'
## மலேசியாவில் ஆத்மஜோதி முத்தையா

[கோலாலம்பூர்]

பல நூற்றாண்டு காலமாக இந்தோனேஷியாவில் வாழ்ந்து வரும் தமிழ்இந்துக்கள் கால கதியில் சரியான முறையில் வழிநடத்தப்படாமையினால் இந்து சமயத்தின் பாரம்பரியம், பண்பாடு, கலை கலாச்சாரங்களை மறந்து வருகின்றனர். இதற்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும் வகையில் சமய மன்றங்கள் அங்கு பணியாற்றி வருகின்றன.

இவ்வாறு ஆத்மஜோதி சஞ்சிகையின் ஆசிரியர் திரு நா. முத்தையா கோலாலம்பூரில் தெரிவித்தார்.

திரு நா. முத்தையா மேலும் தெரிவித்ததாவது:-

மேடானிலுள்ள 2 லட்சத்து 50 ஆயிரம் காரோ இனத்தவர்களில் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் இந்து சமயத்தைத் தழுவியுள்ளனர். இங்கு வாழும் இந்துக்களுக்குப் புதிதாகக் கோவில் ஒன்று எழுப்பும் வேலைகள் ஆரம்பித்துள்ளனர். மற்றும் கல்வி மருத்துவம், சுகாதார வசதிகளையும் காரோ இனத்தவர்களுக்குச் செய்து கொடுக்க பல சமய நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

இந்தோனேஷியாவில் ஒரு மாத காலம் சமயப்பணியாற்றியபின் சிங்கப்பூர், மலாக்கா முதலான இடங்களில் சமய விரிவுரைகளை நிகழ்த்தி வரும் திரு நா முத்தையா தற்போது கோலாலம்பூரில் சமயச் சொற்பொழிவாற்றி வருகிறார்.

இம்மாத முற்பகுதியில் இலங்கை திரும்பவிருக்கும் திரு நா முத்தையாவிற்கு மே மாதம் 22ம் திகதி நாவலப்பிட்டியில் சஷ்டியப்த பூர்த்தி விழாவை நடத்துவதற்கான குழு ஒன்று நாவலப்பிட்டி நகரப்பிரமுகர் திரு பி டி கிருஷ்ணசாமி தலைமையில் நியமிக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

இவ்விழாவில் இந்தோனிஷியா, இந்தியா, மலேசியா ஆகிய இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்வாரெனத் தெரிய வருகிறது.